ஆட்சித் தலைவருக்கு தெரிவிப்பாரேயானால் அந்தந்த வட்டாரத்தைப் பொறுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் தகுந்த ஏற்பாடு செய்ய விதிமுறைகளிலே இடம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம்

***33669—திரு. ஆர்.எம். பழனிசாமி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் மேலும் ஒரு கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்ட விற்பனைக் குழுவின்கீழ் இயங்கும் விற்பனைக் கூடங்களின் கட்டுமானப் பணிக்காக அரசாணை (நிலை) எண் 546, நாள் 28-12-2007-ன்படி ஒரு கோடியே, 77 இலட்சத்து, இரண்டாயிரத்து இருநூற்று ஆறு ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் கட்டுமானப் பணிக்காக 23 இலட்சத்து 97 ஆயிரத்து 500 ரூபாய்க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் நிதியாண்டில் இப்பணி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி, மொடக்குறிச்சிக்கு உட்பட்ட கொடுமுடி ஒன்றியத்திலே, கொடுமுடியிலே இயங்கிக் கொண்டிருக்கிற

2008 ஏப்ரல் 23]

கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது கிட்டத்தட்ட பொருள் ஈட்டுக் கடனுக்காக இரண்டு கிடங்குகள், அதேபோல, ஏலத்திற்கென்று இரண்டு கிடங்குகள் என உள்கட்டமைப்பு இருந்தாலுங்கூட அங்கே வருகிற பொருட்களின் அளவை வைத்து அந்தப் பகுதிக்கு மேலும் ஒரு குடோன் வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதற்கு கிட்டத்தட்ட 23 இலட்சம் ரூபாய் ஒதுக்கியதாகச் சொன்ன அமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 9-40

அதேநேரத்தில், இந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் என்பது— எங்கள் பகுதி விவசாயிகள் முழுமையாக நிரம்பியிருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தாலே, திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை கிட்டத்தட்ட நிலக்கடலை மூட்டைகள் 1,500, அதேபோல தேங்காய், பருப்பு, எள், சூரியகாந்தி 5 ஆயிரம் மூட்டைகள், இப்படி இரண்டு நாட்களுக்கு 10 ஆயிரம் மூட்டைகள் வந்துகொண்டிருக்கின்ற காரணத்தாலே—அந்தப் பகுதியிலே நிச்சயமாக மேலும் ஒரு கிட்டங்கி வேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

அதேபோல, கிட்டத்தட்ட இரண்டு யூனிட் நெல் கொள்முதல் நிலையங்கள் அங்கே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இரண்டு உலர் களங்கள் இருக்கின்றன. மேலும் இரண்டு உலர் களங்கள் வேண்டுமென்கின்ற கோரிக்கையையும் இங்கே வைத்து, நம்முடைய அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தருவார்களா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொடுமுடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தமாக 8.99 ஏக்கர் நிலம் உள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இதில் இரண்டு ஏலக் கொட்டகைகள், இரண்டு ஊரகக் கிட்டங்கிகள், ஓர் அலுவலகக் கட்டடம், ஒரு விவசாயிகள் ஓய்வு அறை, இரண்டு உலர் களங்கள், ஒரு சிற்றுண்டி சாலை ஆகிய கட்டமைப்பு வசதிகள் உள்ளன. இப்போது புதிதாக 23 இலட்சம் ரூபாய் செலவிற்குமேல் கட்டப்பட்டுவரும் அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கிட்டங்கி தவிர,

மேலும் புதிதாக இரண்டு கூடுதல் கிட்டங்கிகள் 52 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. புதிதாக ஒரு பரிவர்த்தனைக் கூடம் ரூபாய் 41 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேலும் இரண்டு கிட்டங்கிகள் கொடுத்ததற்கு எனது மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன். அதேநேரத்தில், கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 500-லிருந்து 1,500 விவசாயிகள் அங்கே வந்து செல்கிறார்கள். அங்கே குறிப்பாக மகளிரும் வருகின்ற காரணத்தாலே—அந்தப் பகுதியிலே கழிவறைக் கூடங்கள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன—நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, ஒதுக்கிய நிதியோடு சேர்த்து அந்தப் பகுதியில் கிட்டத்தட்ட 10-லிருந்து 20 கழிப்பறைகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குக் கட்டித்தர வேண்டும். மேலும், பல்வேறு வசதிகள், குறிப்பாக கீழே கான்கிரீட் தளம் அமைப்பதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி அவர்கள் எழுப்பிய அந்தக் கேள்வியை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ராஜகுமார், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

143—

தூர் வாருதல்

***11260—திரு. எஸ். ராஜகுமார்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—